சென்னை சென்டிரல்

# மெட்ரோ ரெயில் நிலையத்தில் இசை நிகழ்ச்சி

## 11–ந்தேதி நடக்கிறது

சென்னை, டிச.9–

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம், தனியார் இசை பள்ளியுடன் இணைந்து, சென்னை சென்டிரல் மெட்ரோ ரெயில் நிலையத்தில் வரும் 11–ந்தேதி (புதன்கிழமை) இசை நிகழ்ச்சியை நடத்துகிறது. இதில் உள்ளூர் கலைஞர்கள் பலர் கலந்து கொண்டு ஆங்கிலம் மற்றும் தமிழ் பாடல்களை இசைக்கின்றனர். இதனை தொடர்ந்து ஜனவரி 4 மற்றும் 5–ந் தேதிகளில் உலகளாவிய இசை நிகழ்ச்சி சென்னையில் நடக்க இருக்கிறது. இதற்கு முன்னோட்டமாக மெட்ரோ ரெயில் நிலையத்தில் இசை நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. இதில் பங்கேற்க விரும்பும் கலைஞர்கள், தங்கள் விவரங்களை pro.cmrl@tn.gov.in மற்றும் ampr.cmrl2@gmail.com க்கு அனுப்பலாம்.

மேற்கண்ட தகவலை மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.